O.S. No.355/2019
PW–1 திரு.வெற்றிவேல், த/பெ. குருசாமி
Date : 07.08.2024.

**<u>1 முதல் 4 மற்றும் 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி : –</u>**

நான் இந்த வழக்கில் 1வது வாதி ஆவேன். என்னுடைய நிருபண வாக்குமூலத்தை என் வழக்கறிஞரால் தயார் செய்து நான் தாக்கல் செய்துள்ளேன். 2 முதல் 4 வாதிகள் என் உறவினர்கள் ஆவார்கள். 2ம் வாதி எனது உடன்பிறந்த சகோதரர் ஆவார். 3 மற்றும் 4 வாதிகள் என்னுடைய தூரத்து உறவினர்கள் ஆவார்கள். இந்த வழக்கில் கோரியுள்ள பரிகாரங்களை பற்றி எனக்கு தெரியும். நான் இந்த வழக்கை நாகமலை புதுக்கோட்டை நாடார் சமூக மக்கள் சார்பாக தாக்கல் செய்வதாக குறிப்பிட்டுள்ளேன். மேற்படி நாகமலை புதுக்கோட்டை நாடார் சமூக மக்கள் சங்கமானது பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி சங்கமானது பதிவு செய்யப்பட்ட சங்கம் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியானவர் 1ம் பிரதிவாதி சங்கத்தின் பொதுச்செயலாளர் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் கடைகள், காலியிடம் மற்றும் கோவிலாக உள்ளது. ஆனால் தாவா சொத்து விவரத்தில் கடைகள், காலியிடம் மற்றும் கோவில் பகுதி தனித்து குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சாஆ.1 ஆவணம் அசல் ஆவணம் கிடையாது. தாவா சொத்து 1955ம் வருடத்தில் வாங்கப்பட்டதாக பிராதில் குறிப்பிட்டுள்ளேன். அந்த சொத்தை கிரையம் வாங்கியவர்களின் பெயர்கள் காளியப்ப நாடார், த/பெ. வீரபாண்டிய நாடார், கரைச்சாமி நாடார், த/பெ. வீரபாண்டிய நாடார், தங்கவேல் நாடார் த/பெ. நல்லதம்பி நாடார், நல்லதம்பி நாடார் த/பெ.நல்லதம்பி நாடார், முத்தையா நாடார், த/பெ. வெற்றிவேல் நாடார், முத்துசாமி நாடார், த/பெ. காசி நாடார், மண்டல நாடார், த/பெ. அழகுமார் நாடார், நல்லவ நாடார், த/பெ.அழகுமார் நாடார், சின்னக்காளை நாடார், த/பெ.பாண்டிய நாடார், மதியராஜ் நாடார், த/பெ.சூசை நாடார் ஆகும். மேற்படி பத்து நபர்களில் நான் வெற்றிவேல் நாடார் மகன் முத்தையா நாடார் குடும்பத்தை சார்ந்தவன். மேற்படி நபரின் வாரிசு என்பதை காட்ட நான் வாரிசு

சான்றிதழ் எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் முத்தையா நாடாரின் பேரன் ஆவேன். முத்தையா நாடாருக்கு ஒரே ஒரு மகன், அவர் பெயர் குருசாமி என்ற ஜெயக்கனி நாடார், அவருக்கு இரண்டு ஆண் மக்களும் மூன்று பெண் மக்களும் உண்டு, அதில் நானும் 2ம் வாதியும் அவருடைய மகன்கள் ஆவோம். மேற்படி மூன்று பெண் மக்களை இந்த வழக்கில் வாதியாக சேர்த்து பரிகாரம் எதுவும் கோரவில்லை. நான் மேற்படி 10 நபர்கள் சார்பாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். ஆனால் மேற்படி 10 நபர்களின் இதர வாரிசுகள் குறித்து இந்த வழக்கில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கை பொதுநல வழக்காக தாக்கல் செய்வதற்காக நாகமலை புதுக்கோட்டை நாடார் சமூக மக்கள் சார்பாக தீர்மானம் எதுவும் ஏற்படுத்தி தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதிகள் தவிர நாகமலை புதுக்கோட்டையில் வாழும் நாடார் மக்கள் யாரும் தாவா வழக்கில் பரிகாரம் கோர ஒப்புதல் பெறவில்லை என்றால் சரிதான். தாவா வழக்கில் சொல்லப்பட்டுள்ள 6 கடைகள் எப்போது கட்டப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தில் சொல்லப்பட்டுள்ள கோவில் 2008ல் கட்டப்பட்டது, எனது தகப்பனார் 2010ல் காலமானார், அதன்பிறகு நான் அந்த கோவிலுக்கு 2011ம் வருடத்தில் கும்பாபிஷேகம் செய்தேன். நான் கும்பாபிஷேகம் செய்தது சம்பந்தமாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. எனது தகப்பனார் குருசாமி என்ற ஜெயக்கனி நாடார் மேற்படி நாகமலை புதுக்கோட்டை நாடார் சமூக மக்கள் சங்கத்தை பொறுத்தளவில் செயலாளராக இருந்தார். எனக்கு 2010ம் ஆண்டு வரை தாவா சொத்து குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். பிராதில் சொல்லப்பட்டுள்ள தாவா சொத்தின் நான்குமாலுக்கும், வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள சொத்தின் நான்குமாலுக்கும் இடையே வித்தியாசம் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தை மேற்படி 10 நபர்கள் யாரிடமிருந்து வாங்கினார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை, ஆனால் ஒரு நபர் பெயர் பொன்னுவீரணன் சேர்வை என்பவரிடமிருந்து வாங்கியதாக ஞாபகமுள்ளது. தாவா சொத்து 1955ம் ஆண்டு

வாங்கப்பட்ட பிறகு வருவாய்துறை ஆவணங்கள் மேற்படி நாகமலை புதுக்கோட்டை நாடார் சமூக மக்கள் சங்க பெயருக்கு மாறியுள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்து குறித்து வா.சா.ஆ.3 ல் என் தரப்பில் பட்டா எண்.4133 தாக்கல் செய்து, அதில் என் பெயர் மற்றும் எனது தம்பி பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பட்டா எவ்வாறு எங்களுடைய பெயருக்கு வந்தது என்று எனது பிராதிலோ நிருபண வாக்குமூலத்திலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல, எனது தாத்தா முத்தையா பெயரில் பட்டா இருந்து அதன் பிறகு எங்கள் பெயருக்கு மாறியுள்ளது. ஆனால் எனது தகப்பனார் பெயருக்கு பட்டா மாறுதல் ஆகவில்லை. வா.சா.ஆ.6 தான செட்டில்மென்ட் பத்திரத்தில் கண்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். வா.சா.ஆ.6 தான செட்டில்மென்ட் பத்திரத்தை பதிந்து கொடுத்த வி.கே.நடராஜன் மற்றும் பெரியகருப்பண் ஆகியோர்கள் இந்த வழக்கில் சேர்க்கவில்லை, ஏனெனில் அவர்கள் உயிருடன் இல்லை. அவர்களுக்கு வாரிசுகள் உள்ளனர், அவர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை. எனக்கு திருமணமாகவில்லை. நான், என் தகப்பனார், என் தம்பி ஆகியோர்கள் பிராதில் குறிப்பிட்டுள்ள முகவரியில் தான் குடியிருந்து வருகிறோம். எனது தகப்பனார் நாகமலை புதுக்கோட்டை நாடார் சமூக குடியிருப்பு சங்கத்திற்கு செயலாளராக இருந்தார். இந்த விவரத்தை நான் பிராதில் குறிப்பிடவில்லை. ஆனால் எனது தகப்பபனார் நாகமலை புதுக்கோட்டை என்.ஜி.ஓ குடியிருப்பு இந்து நாடார் உறவின்முறைக்கு செயலாளராக பணியாற்றி வந்தார் என்றால் எனக்கு தெரியாது. எனக்கு வா.சா.ஆ.6 ஆவணத்தை பற்றி 2018 அல்லது 2019 ம் வருடத்தில் தான் எனக்கு தெரியும், நான் மதுரை மற்றும் சென்னையில் மாறி மாறி குடியிருப்பேன். தாவா சொத்தை நான் பராமரித்து வந்தது சம்பந்தமாகவும் அந்த கட்டிடங்களை கட்டியது சம்பந்தமாகவும் அந்த சொத்துக்கள் என்னுடைய பொறுப்பில் இருந்தது என்பதை காட்டும் அரசு ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை,

அந்த சொத்தானது என் பொறுப்பில் இல்லை, பொதுவாக உள்ளது. வா.சா.ஆ.5 ல் குறிப்பிட்டுள்ள வட்டாட்சியர் தரப்பு தாவா சொத்து பட்டா மாறுதல் விசாரணைக்கு ஆஜராகினேன் என்றால் சரிதான். மேற்படி நடவடிக்கை தள்ளுபடி செய்யப்பட்டதற்கான ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். ஆனால் அந்த விசாரணை முடிவு சம்பந்தமான ஆவணங்களை இந்த நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்து குறித்து வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது. ஆனால் தாவா சொத்து குறித்து வேறு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யவில்லை. இந்த நீதிமன்றத்தில் இந்த வழக்கு நிலுவையில் இருப்பதால் வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் உள்ள விசாரணையை நிறுத்தி வைக்க வேண்டுமென்று மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்த விவரத்தை நான் நிருபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்று எனக்கு ஞாபகமில்லை. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணையின் எண் எனக்கு ஞாபகமில்லை. 1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை படித்து பார்த்துள்ளேன். அதில் கண்டுள்ள விவரங்கள் ஓரளவிற்கு தெரியும். 1ம் பிரதிவாதி சங்கம் சார்பாக ஈஸ்வரன் மற்றும் சண்முகக்கனி ஆகியோர் எனக்கு எதிராக குற்ற வழக்கு எண்.431/2012 நாள் 24.11.2012 நாகமலை புதுக்கோட்டை போலிசார் சார்பில் தாக்கல் செய்யப்பட்டது தெரியும். அந்த முதல் தகவல் அறிக்கையில் 1ம் பிரதிவாதியின் சங்கத்தில் நான் அத்துமீறி நுழைந்து ஆவணங்களை திருடிச்சென்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் அந்த வழக்கு பொய் வழக்கு என்று ஈஸ்வரன் (7ம் பிரதிவாதி) மற்றும் சண்முகக்கனி ஆகியோர் வாபஸ் பெற்றுவிட்டனர். ஆனால் மேற்படி குற்ற வழக்கு பற்றி இந்த வழக்கில் நான் குறிப்பிடவில்லை. மேற்படி சம்பவம் நடந்த நாள் 24.11.2012 என்றால் சரிதான். அந்த குற்ற வழக்கில் ஈஸ்வரன் (7ம் பிரதிவாதி) மற்றும் சண்முகக்கனி ஆகியோர்கள் நாகமலை

புதுக்கோட்டை என்.ஜி.ஜி.ஓ குடியிருப்பு இந்து நாடார் உறவின்முறை பொதுச்செயலாளர் என்று குற்ற வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி நாகமலை புதுக்கோட்டை என்.ஜி.ஜி.ஓ குடியிருப்பு இந்து நாடார் உறவின்முறை பெயரில் வழக்கு கொடுத்த விவரம் எனக்கு தெரியும். தாவா வழக்கு 05.12.2019 ம் தேதி தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் நாகமலை புதுக்கோட்டை நாடார்கள் உறவின்முறை மற்றும் நாகமலை புதுக்கோட்டை என்.ஜி.ஜி.ஓ குடியிருப்பு இந்து நாடார் உறவின்முறை ஆகிய இரு சங்கங்கள் 18.12.1995 ம் தேதி இணைப்பு செய்த விவரம் சொல்லப்பட்டுள்ள விவரம் பற்றி எனக்கு தெரியாது. நாகமலை புதுக்கோட்டை நாடார்கள் உறவின்முறை சங்கத்திற்கு பொதுச்செயலாளராக எனது தகப்பனார் இருந்ததில்லை. நாகமலை புதுக்கோட்டை நாடார் உறவின்முறை பொதுவிற்கான என்ற சங்கத்தில் எனது தகப்பனார் பொதுச்செயலாளராக இருந்தார். மேற்படி சங்கத்தில் எனது தகப்பனார் பொதுச்செயலாளராக இருந்தார் என்பதை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்து அரசாங்கத்தால் நில ஆர்ஜிதம் செய்வதற்கு சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். அந்த வருடம் 2018 என்றால் சரியல்ல. மேற்படி நில ஆர்ஜிதம் மூலம் வரும் பணத்தை பெறுவதற்காக தான் நானும் மற்ற வாதிகளும் சேர்ந்து இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணம் 2010 ம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட பிறகு நான் என் தரப்பில் பிரதிவாதிகளுக்கு கேவியேட் மனு அனுப்பினேன் என்றால் எனக்கு தெரியாது. என் தகப்பனார் 2010 ல் காலமான பிறகு எனக்கு பொதுச்செயலாளர் பதவி தராத காரணத்தினால் தான் நான் பிரதிவாதி சங்கத்திற்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதி சங்கம் தாவா சொத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டிடங்களில் உள்ள ஒரு கட்டிடத்திற்குள் இயங்கி வருகிறது என்றால் சரியல்ல. நான் வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு

கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தாவா சொத்தின் பரிகாரத்தை சரியாக மதிப்பீடு செய்து அதற்குரிய நீதிமன்ற கட்டணத்தை சரியாக செலுத்தவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி சங்கம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.